**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110250

1. District : Coimbatore
மாவட்டம்
PS: Vigilance and Anti Corruption Coimbatore
காவல்நிலையம்
Year:
ஆண்டு
FIR No.: 12/2020
மு.த.அ. எண்
Date: 12.12.2020
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act — Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: 1988 amended by the — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 12.12.2020
நாள் முதல் 0400 hrs
Date to : 12.12.2020
நாள் வரை 10.00 hrs
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 12.12.2020
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 1400 hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 12.12.2020
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் என்
Time : 14.30 hrs.
நேரம்

4. Type of Information : Written/ Oral : Tamil typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 25 km South west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : RTO check post (out going) K.G Chavadi Check post Coimbatore
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Duraisamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality :
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation :
தொழில் District Inspection Cell officer/Deputy Collector
(g) Address :
முகவரி District collector's office Coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tmt V. Saroja, motor vehicle inspector, non technical K.G Chavadi Check post, (out going) Coimbatore
(2) Thiru M. Arul Assistant K.G Chavadi (out going) Check post Coimbatore
(3) Tr. J. Jaya kumar Office Assistant K.G Chavadi Check post, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 17-12-2020 — 16:00 h
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M.V. Vijayalakshmi
Rank: நிலை Inspector No. எண் .........
VMPC, Coimbatore.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

Contents of FIR in Cr.No.12/2020/AC/CB u/s 7 (a) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.

இன்று 12.12.2020-ம் தேதி மதியம் 14.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் எம்.விஜயலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.துரைசாமி, ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்/மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2020/AC/CB u/s 7 (a) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ஆக வழக்கு 14.30 மணிக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.P.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயமுத்தூர் ந.க.எண்.700/2020/ஐ1 நாள் 12.12.2020 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம்- கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி(வெளிச்செல்கை)- திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. கோவை மாவட்டம், கந்தேகவுண்டன் சாவடி போக்குவரத்துத்துறை, (வெளிச்செல்கை) சோதனை சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள், சோதனை சாவடியை கடந்து செல்லக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்வதற்காகவும், தற்காலிக உரிமம் (Temporary Permit) வழங்குவதற்காகவும் E-Way Bill மற்றும் Trip Sheet, ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச் சாவடி சீல் வைக்கவும், வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம் கந்தேகவுண்டன் சாவடி போக்குவரத்துதுறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தினை 12.12.2020 ம் தேதி காலை சுமார் 0400 மணியளவில் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.விஜயலட்சுமி

மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரம் தெரியவந்தது. மேற்படி போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பமல்லாத) திருமதி.V.சரோஜா என்பவரும் உதவியாளராக திரு.M.அருள் என்பவரும் அலுவலக உதவியாளராக திரு.T ஜெயக்குமார் என்பவரும் 11.12.2020 ம் தேதி இரவு 0800 மணிமுதல் பணியில் இருந்தார்கள். மேற்படி திடீர் தணிக்கையின் போது சோதனைச்சாவடிக்கு முன்பாக கோவை-பாலக்காடு சாலையில், எதிர் எதிர் திசையில் செல்லும் சாலைகளின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள குடிசையின் முன்பு அலுவலக உதவியாளர் திரு.T.ஜெயக்குமார் என்பவர் தனக்கு உதவியாக திரு.செல்வம் (எ) செல்வராஜ், திரு.செந்தில் மற்றும் திரு.சரவணன் ஆகியோருடன் நின்றுகொண்டு சோதனை சாவடிக்கு முன்பாக உள்ள நான்குவழி சாலையில் சோதனைசாவடியை கடந்து கேரளா நோக்கி செல்லும் வாகனங்களை தடுத்து நிறுத்தி E-Way bill மற்றும் Trip Sheet-ல் சீல் வைக்க செல்லும் வாகன ஓட்டுனர்கள் மற்றும் கிளீனர்களிடம் மாமூலாக பணத்தை எடுத்துச் செல்லும்படி தெரிவித்து அதன் பின்னர் வாகன ஓட்டுனர்கள், கிளீனர்கள் சோதனை சாவடியில் மாமூல் பணத்தை கொடுத்து E Way பில் மற்றும் ட்டிரிப் ஷீட்டில் சோதனை சாவடியில் சீல் வைத்து வந்த பின்னர் அவர்களது வாகனத்தை தொடர்ந்து இயக்க அனுமதித்தது தெரியவந்தது. மேற்படி சோதனை சாவடியில் தணிக்கையின் போது சீல் வைக்கும் கவுண்டரில் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.V.சரோஜா மற்றும் உதவியாளர் திரு.M.அருள் என்பவரும் அமர்ந்திருந்தார்கள். திருமதி.V.சரோஜா மற்றும் திரு.M.அருள் ஆகியோர் அமர்ந்திருந்த சோதனைச்சாவடி சீல் வைக்கும் இருக்கைக்கு முன்பு இருந்த மர டேபிள் மேல் ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. அதனை எடுத்து எண்ணிபார்க்க ரூ.5,110/-இருந்தது. மேற்படி பணத்தை பற்றி திருமதி.சரோஜா மற்றும் உதவியாளர் அருள் அவர்களிடம் கேட்க அவர்கள் சோதனை சாவடிக்கு சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுக்கும் பணம் என்று சொன்னார்கள். எனவே மேற்படி பணம் ரூ.5,110/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திருமதி.சரோஜா மற்றும் திரு.M.அருள் ஆகியோரிடம் வேறு எதாவது பணம் உள்ளதா என்பதை பற்றி

விசாரிக்க, திருமதி.சரோஜா அவர்கள், அவர் அமர்ந்திருந்த சோதனைச்சாவடி சீல் வைக்கும் இருக்கைக்கு முன்பு இருந்த சி.சி.டிவி கேமரா மானிட்டர் வைத்திருந்த மர ரேக்கின் இரண்டாவது தட்டிலிருந்த அட்டை பாக்சில் இருந்து ரூபாய் நோட்டுக்கள் கொண்ட சிறிய கத்தையை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிபார்க்க ரூ.15,000/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி திருமதி.சரோஜா மற்றும் திரு.M.அருள் ஆகியோரிடம் கேட்க அவர்கள் சோதனை சாவடிக்கு சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுக்கும் பணம் என்று சொன்னார்கள். எனவே மேற்படி பணம் ரூ.15,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் வேறு பணம் ஏதேனும் உள்ளதா என்று கேட்டபோது மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.சரோஜா அவர்கள் தானாக முன்வந்து நேற்று இரவு 8.00 மணி முதல் தங்களது திடீர் தணிக்கைக்கு முன்புவரை சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுத்த பணத்தை கணினி அறைக்கு எதிரே இருக்கும் பதிவறையில் வைத்திருப்பதாக தெரிவித்து அதனை திருமதி.சரோஜா அவர்கள் திடீர் தணிக்கை குழுவினரை மேற்படி பதிவறைக்கு அழைத்து சென்று அந்த அறையில் தென்மேற்கு பகுதியில் இருந்த ஆவணங்களின் இடையே வைக்கப்பட்டிருந்த ஒரு கத்தை கொண்ட பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை எண்ணிப்பார்த்ததில் ரூ.65,000/-ம் இருந்தது. மேற்படி பணம் ரூ.65,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அருகில் இருந்த திரு.அருள் என்ற உதவியாளரை பணம் பற்றி விசாரிக்க அவர் தானாக முன்வந்து பிரதான அறையில் கிழபுறம் இருந்த பதிவறையில் வடமேற்கு மூலையில் வைக்கப்பட்டிருந்த இரும்பு ரேக்கின் நடுத்தட்டின் மேல் இருந்த அட்டைப்பெட்டியிலிருந்து பணம் ரூ.2,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி விசாரிக்க தங்களது திடீர் தணிக்கைக்கு முன்புவரை சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுத்த பணம் என்று கூறியதால், அந்த பணம் ரூ.2,000/-ஐ விசாரண்ணக்காக கைபற்றப்பட்டது. அதன் பின் அலுவலக உதவியாளர் திரு.ஜெயக்குமார் அவர்களை விசாரிக்க அவரது பணியானது சோதனை சாவடி வழியாக போகும் வாகனங்களை நிறுத்தி வாகனத்திற்குரிய ஆவணங்களை வாகன ஓட்டுநர்களிடம் பெற்றுவந்து சோதனைச்சாவடியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசீலனைக்கு காண்பித்து சீல்பெற்று

திரும்ப வாகன ஓட்டிநர்களிடம் வழங்குவதாகும் என தெரிவித்தார். இன்று 12.12.2020 காலையில் சோதனைச்சாவடி வழியாக செல்லும் வாகனங்களை நிறுத்தி சீல் வைக்க ஓட்டுநர்கள் செல்லும் போது மாமூலாக கொடுக்கும் பணத்தை எடுத்துச் செல்லும் படி அறிவுறுத்தி வந்ததாகவும், அப்போது வாகன ஓட்டுனர்கள் கிளீனர்கள் சோதனை சாவடியில் மாமூல் பணத்தை கொடுத்து ட்டிரிப் ஷீட்டில் சோதனை சாவடி சீல் வைத்து வந்த பின்னர் தான் அவர்களது வாகனத்தை விடுவித்து வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவ்வாறு பணிநாளில் மாமூலாக பெற்ற பணத்தில் தனக்கு 25%-ம், உதவியாளர் திரு.அருள் அவர்களுக்கு 25%-ம், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.சரோஜா அவர்களுக்கு 50%-ம் என்று பிரித்துகொள்வோம் என்று தெரிவித்தார். அது குறித்து உதவியாளர் திரு.அருள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.சரோஜா அவர்களிடம் விசாரிக்க அவர்களும் மேற்கண்டவாறு கிடைக்கும் மொத்த மாமூல் பணத்தை மேற்கண்டவாறு பிரித்துகொள்வோம் என தெரிவித்தனர். மேற்படி திடீர் தணிக்கையின் போது சோதனை சாவடி கவுண்டரில் சீல் வைத்துவிட்டு திரும்பிய வாகன ஓட்டுனர்களான திரு. சுபாஷ் த/பெ கலியமூர்த்தி மற்றும் திரு. சுதாகர் த/பெ மனோகரன் ஆகியோர் தங்களது டிரிப் ஷீட்டில் சீல் வைப்பதற்காக மேற்படி சோதனை சாவடி கவுண்டரில் உள்ள அலுவலர்கள் முறையே ரூ.100/- மற்றும் ரூ.500/- மாமூலாக பணம் கேட்டு பெற்றுக் கொண்டதாக தெரிவித்தார்கள். மேலும் மேற்படி சோதனை சாவடியை நோக்கி சீல் வைப்பதற்காக வந்த வாகன ஓட்டுனர்களான திரு. ராமஜெயம் த/பெ ஆதிசிவம் மற்றும் திரு.குழந்தைவேல் த/பெ மன்னார் ஆகியோர்களை விசாரிக்க தாங்கள் சோதனை சாவடியில் இருக்கும் போக்குவரத்து துறை அலுவலர்களுக்கு சீல் வைப்பதற்காக மாமூலாக பணம் ரூ.100/- கேட்பார்கள் என்றும் அவர்கள் கேட்கும் பணத்தை கொடுத்தால் தான் சீல் வைப்பார்கள் என்றும் அப்படி கொடுக்கவில்லை என்றால் வாகனத்தின் ஆவணங்களை வாங்கி வைத்துக் கொண்டு கேஸ் போடுவோம் என்று மிரட்டுவார்கள் என்றும் அதற்காகவே தாங்கள் வழக்கமாக அவர்கள் கேட்கும் மாமூல் பணத்தை கொடுத்துவிட்டு சீல் பெற்றுச் செல்வதாகவும் தெரிவித்தார்கள். மேற்படி நான்கு நபர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களுடைய வாகனங்களின் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து மோட்டார் வாகன

ஆய்வாளர் திருமதி.சரோஜா, உதவியாளர் திரு. அருள் மற்றும் அலுவலக உதவியாளர் திரு. ஜெயக்குமார் ஆகியோரிடம் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கை குறித்து ஒரு நடவடிக்கை தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.87,110/- மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். இப்புகார் குறித்து உரிய புலன்விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு 2) கைப்பற்றப்பட்ட பணம் 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் 1 முதல் 7 வரையிலானவை 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். (Sdxxxx) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயமுத்தூர். Sir, received the complaint on 12.12.2020 at 14.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.12/2020/AC/CB u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 14.30 hrs against Tmt.V.Saroja, Motor Vehicle Inspector(Non-Technicai)-kG Chavadi Checkpost, Tr.M.Arul, Assistant, KG Chavadi Checkpost and Tr.T.Jayakumar, Office Assistant, KG Chavadi Checkpost. (Sdxxxxxx) M.Vijayalakshmi, Inspector of Police, V&AC, Coimbatore. இதன் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயமுத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

(எம்.விஜயலட்சுமி) 12.12.2020
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.